| SUBJECT | CBI CLEARS VGN FAIRMONT PROJECT IN GUINDY |
|---|---|
| PUBLICATION | DINA THANTHI |
| DATE OF ISSUE | 04.05.2019 |
| PAGE NO | 27 |

### கிண்டி அடுக்குமாடி குடியிருப்பு நிலப்பிரச்சினை விவகாரம்:

# வி.ஜி.என். கட்டுமான நிறுவனம் மீதான குற்றச்சாட்டு ரத்து

## சி.பி.ஐ. கோர்ட்டு உத்தரவு

சென்னை, மே.4-

சென்னை கிண்டி அடுக்குமாடி குடியிருப்பு நிலப்பிரச்சினை விவகாரத்தில் வி.ஜி.என். கட்டுமான நிறுவனத்தின் மீதான குற்றச்சாட்டை ரத்து செய்து சி.பி.ஐ. கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### ரூ.272 கோடிக்கு ஏலம்

சென்னை கிண்டியில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துக்கு சொந்தமாக 10.46 ஏக்கர் நிலம் இருந்தது. இந்த நிறுவனம் எஸ்.பி.ஐ. வங்கி உள்பட பல்வேறு வங்கிகளில் பெற்ற கடன் தொகையை திரும்ப செலுத்தாததால் கடன் வசூல் தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி இந்த நிலம் ஏலம் விடப்பட்டது.

கடந்த 2013-ம் ஆண்டு வி.ஜி.என். பிராப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற கட்டுமான நிறுவனம் ரூ.272 கோடி ரூபாய்க்கு அந்த நிலத்தை ஏலம் எடுத்தது.

இதைத்தொடர்ந்து அங்கு, 1,600 அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டுவதற்கு வி.ஜி.என். நிறுவனம் முடிவு செய்தது. முதற்கட்டமாக 2015-ம் ஆண்டு 500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

### முறைகேடு நடக்கவில்லை

இந்தநிலையில் அந்த நிலம் வெளிப்படையாக ஏலம் விடப்படவில்லை என்றும், இதனால் மத்திய அரசுக்கு ரூ.115 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறி வி.ஜி.என். நிறுவனம், அதன் நிர்வாக இயக்குனர் பிரதீஸ் தேவதாஸ், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி குப்தா (இவர் தற்போது ஓய்வு பெற்று விட்டார்), எஸ்.பி.ஐ. அதிகாரிகள் லியோன் தெரட்டில், தலைமை மேலாளர் ராமதாஸ் (இவரும் ஓய்வு பெற்று விட்டார்) ஆகியோர் மீது சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த 2016-ம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்து இந்த குற்றச்சாட்டு குறித்து சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணையில் எந்த முறைகேடும் நடக்கவில்லை என்பது சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு தெரியவந்தது.

### வழக்கு ரத்து

இதைத்தொடர்ந்து, சென்னையில் உள்ள சி.பி.ஐ. கோர்ட்டில் சி.பி.ஐ. அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அதில், 'இந்த விவகாரம் தொடர்பாக 459 ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 80 பேரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த விசாரணையில் வி.ஜி.என். நிறுவனம், அதன் நிர்வாக இயக்குனர், வங்கி அதிகாரிகள் உள்பட யாரும் முறைகேட்டில் ஈடுபடவில்லை என்பது தெரியவந்துள்ளது. எனவே, அவர்கள் மீதான வழக்கை முடித்து வைக்கலாம்' என்று கூறப்பட்டிருந்தது.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஜவகர், இந்த வழக்கை ரத்துசெய்து உத்தரவு பிறப்பித்தார்.